ராணி காமிக்ஸ்
முகமூடிவீரர்
மாயாவி
தோன்றும்
பேய்க் கோட்டை
ரூ. 2

ராணி காமிக்ஸ்-250
(மாதம் இருமுறை இதழ்)

KK

நவம்பர் 16-30
1994



பேய்க் கோட்டை


பெங்காலியாவின் அடர்ந்த காட்டுக்குள் இருக்கும் மண்டை ஓட்டுக் குகைக்குள் முகமூடி வீரர் மாயாவி இருந்தார். மாயாவியின் முன்னோர்கள் வாழ்ந்த குகை, அது.
ஒவ்வொரு நூற்றாண்டிலும் காட்டுக்குள் பெயர் சொல்லும்படி ஒவ்வொரு இடங்கள் உருவாகியிருந்தன.


18-ம் நூற்றாண்டில் காட்டுக்குள் ஒரு கல் மண்டபம் இருந்தது.
அதுபோல் 19-ம் நூற்றாண்டில் பாலைவனத்தில் ஒரு உயரமான கோட்டை இருந்தது. இந்தக் கோட்டைக்கு மாயாவிக் கோட்டை என்று பெயர்.


ஒருநாள் மாயாவி கோட்டு சூட்டு,
தொப்பியுடன் பாலைவனத்தில்
நடந்து வந்துகொண்டிருந்தார்.
கூடவே டெவிலும் வந்தது.
அப்போது பின்னால்
ஒரு கார் வந்தது.
கார் மாயாவியை
நெருங்கியதும் நின்றது.
காரில் ஒரு பெரியவர் இருந்தார்.
நீங்கள் எங்கே போகவேண்டும்? காரில் ஏறிக் கொள்ளுங்க ளேன்!
ரொம்ப நன்றி!


மாயாவி காரில் ஏறிக்கொண்டார். தபால் துறையின் கார், அது.
இந்த பாலைவனத்தில் எங்கே போகிறீர்கள்?
நான்கு கிலோ மீட்டர் தாண்டிப் போகவேண்டும்!

நான்கு கிலோ மீட்டரா? இங்கேயிருந்து 100 கி.மீட்டர் வரை வீடு எதுவும் கிடையாதே! இது உங்கள் நாயா?
ஆமாம்! நாங்கள் அங்கே முகாமிடப் போகிறோம்!


இந்தப் பாலைவனத்தில் முகாமிடப் போகிறீர்களா? இது ஆபத்தான பாலைவனம்! கொள்ளையர்கள் நடமாட்டம் அதிகமிருக்குமே!

இங்கே இந்தக் கோட்டை ஒன்றுதான் இருக்கிறது! மாயாவிக் கோட்டை என்று பெயர்! இந்தக் கோட்டையில் பேய்கள் இருப்பதாக சொல்கிறார்கள்.
நானும் கேள்விப் பட்டிருக்கிறேன்!


முன்னொரு காலத்தில் இந்த கோட்டைக்கு அருகே செவ்விந்தியர்களின் கிராமம் இருந்ததாம்! அவர்கள் அனைவரையும் வெள்ளையர்கள் படுகொலை செய்துவிட்டார்கள்!
கேள்விப்பட்டேன். பிறகு...
தபால்காரர் அந்தப் பேய் கோட்டை பற்றி சொன்னார்.


அந்தப் பயங்கர பாலைவனத்தில் பறவைகள், எலிகள், பல்லிகளைத் தவிர மனிதர்கள் யாரும் இல்லை.


ஆனால், இரவில் செவ்விந்தியர்களின் ஆவிகள் ஒன்றுகூடி கும்மாள மடிப்பதாகச் சொல்கிறார்கள்.


அப்படியா... கேட்க சுவையாக இருக்கிறது!
கேட்க வேடிக்கையாக இருக்கிறதா? இதோ இந்த இடத்தில்தான் செவ்விந்தியர்களின் கிராமம் இருந்தது!

செவ்விந்தியர்கள் ஒன்றாகக் கூடி வாழ்ந்தார்கள். அவர்கள் மாட்டு மந்தைகளை கவனித்துக்கொண்டும், வேட்டையாடியும் பிழைத்து வந்தார்கள்.


ஒருமுறை செவ்விந்தியர்கள் நகருக்குள் சென்றபொழுது வாய்த்தகராறில் போனி என்பவன் ஒரு இராணுவ வீரனை குத்திக் கொன்றுவிட்டான்.
டேய் என்னடா சொன்னாய்...?
ஏய்... விடு அவனை!

கொலை விழுந்ததும் செவ்விந்தியர்கள் தன் கிராமத்தில் கூடிப் பேசினார்கள்.
தலைவரே! அவன் என்னை இழிவாகப் பேசினான். அதனால்தான் அவனை கொன்றேன்!
ஆமாம்! நானும் பார்த்தேன்!

அப்பொழுது ஒருவன் விரைந்து வந்தான்.
தலைவரே! இராணுவ வீரர்கள் நம் கிராமத்தை நோக்கி வருகிறார்கள்!
நாம் போனிக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும்!
ஆமாம்! அவர்கள் போனியைப் பிடித்துவிட்டால் தூக்கில் போட்டு விடுவார்கள்!


அன்று முதல் செவ்விந்தியர்களுக்கு சிக்கல்கள் தோன்றின. வீரர்கள் தலைவரை சந்தித்தார்கள்.
மரியாதையாகப் போனியை எங்களிடம் ஒப்படைத்துவிடுங்கள்!
முடியாது!


திடீரென்று தபால்காரரின் கார் ஓர் இடத்தில் நின்றுவிட்டது.
என்ஜின் சூடாகிவிட்டது. தண்ணீர் ஊற்றினால் சரியாகிவிடும்!
தண்ணீர் வேண்டுமே?


இந்த இடத்தில்தான் செவ்விந்தியர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்!
கதையை சொல்லிக்கொண்டு வாருங்கள்!


அந்தக் கிழவரும் மாயாவியும் அப்படியே நடந்து வந்தார்கள்.
இதோ இதுதான் செவ்விந்தியர்களின் கிராமம்! இரவில் செவ்விந்தியர்களின் ஆவி ஒன்றுகூடி கும்மாளமடிக்கும்!
சரி, படுகொலையைப் பற்றிச் சொல்லுங்கள்!


போனியை ஒப்படைக்க செவ்விந்தியர்கள் தயாராக இல்லை.
போனியை ஒப்படைக்கப் போகிறீர்களா? இல்லையா?
முடியவே முடியாது! உங்களால் என்ன செய்ய முடியுமோ செய்து கொள்ளுங்கள்!
தலைவன் முடிவாகவும் இறுதியாகவும் கூறினான்.


உடனே இராணுவ வீரர்கள் நாட்டுக்குத் திரும்பி, தளபதியிடம் கூறினார்கள்.
எவ்வளவு முயன்றும் அவர்கள் போனியை ஒப்படைக்கவில்லை!
முட்டாள்! அவன் நம் ஆளை கொன்றிருக்கிறான்! அவர்களை சும்மா விடக்கூடாது! கூண்டோடு அழித்துவிட்டு வாருங்கள்!

தளபதி கட்டளையிட்டதும் இராணுவ வீரர்கள் படையுடன் செவ்விந்தியர்களின் கிராமத்தை நோக்கி வந்தார்கள்.

போனி தலைவனிடம் பேசினான்.
தலைவரே! என்னை வெள்ளை நாய்களிடம் ஒப்படைத்து விடுங்கள்!
இல்லை போனி! உன்னை இழக்க நாங்கள் தயாராக இல்லை! அவர்களிடம் மோதிப் பார்த்துவிடுவோம்!
ஆமாம், போனி! அவர்களை ஒரு கை பார்த்து விடுவோம்!


உடனே செவ்விந்தியர்களுக்கும், இராணுவ வீரர்களுக்கும் மோதல் வெடித்தது!
டுமீல்...!
டுமில்...!
சர்...!
சர்...
துப்பாக்கி குண்டுகள் பறந்தன! அம்புகள் பாய்ந்தன!

தளபதி! அவர்கள் நமக்கு நிகராகத் தாக்குதல் நடத்துகிறார்களே! என்ன செய்வது?
அப்படியா? இப்பொழுது பார்!


பீரங்கிகள் தயாராகட்டும்!
பீரங்கியா? வேண்டாம், தளபதி!
KK
தபால்காரர் நடந்த கதையை மாயாவியிடம் விளக்கிக் கூறிக்கொண்டிருநதார்.

ஏய்...! மரியாதையாக போனியை ஒப்படைத்தால் இத்தோடு தாக்குதலை நிறுத்திக்கொள்ளு கிறோம்!
இல்லை! அவர்களிடம் உன்னை ஒப்படைக்கக் கூடாது! வருவது வரட்டும்!
ஜெனரல்! பீரங்கி வேண்டாம்! கிராமத்தில் குழந்தைகளும் பெண்களுமாக நிறையப் பேர் இருக்கிறார்கள்!
இல்லை! அவர்கள் சரண் அடையாவிட்டால் பீரங்கிகள் முழங்கியே தீரும்!

இரு தரப்பினரும் ஒரு மணி நேரத்துக்கும் மேலாகக் கடுமையாக மோதினார்கள்.
முடிவில் போனியை ஒப்படைத்தார்களா? இல்லையா?

பீரங்கிகள் முழங்கட்டும்!
உங்களுக்கு எத்தனையோ முறை வாய்ப்புக் கொடுத்தும் நீங்கள் போனியை ஒப்படைக்கவில்லை! நீங்கள் போய் அவனை தேடிப் பாருங்கள்!

பீரங்கிகள் முழக்கமிட்டதால் செவ்விந்தியர்களின் கிராமம்
சின்னாபின்னமாகியது. குடிசைகள் தீப்பற்றி எரிந்தன.
!!!
இரண்டு இராணுவ வீரர்கள் போனியை தேடி
கிராமத்துக்குள் வந்தார்கள்.

போனி
கிடைத்தானா?
இல்லை, தளபதி.
கிராமத்தில் யாருமே
உயிரோடு இல்லை! அனைவரும்
இறந்துவிட்டார்கள்!

குழந்தைகள், பெண்கள் ஒருவர் கூட உயிரோடு இல்லையா?
இல்லை! அதுதான் பீரங்கியை உபயோகிக்க வேண்டாம் என்றேன்!


நான் போனியை சரண் அடையச் சொன்னேன். அவர்கள் கேட்கவில்லை. அதனால்தான் இந்த முடிவு! சரி, நமது படைகள் திரும்பட்டும்!


உடனே ஆங்கிலேயர்களின் படை திரும்பியது. செவ்விந்தி
யர்களின் கிராமம் முழுக்க தீ பரவி கொழுந்துவிட்டு
எரிந்தது.
இது ஒரு இனப் படுகொலை.

ஜெனரல் நாடு திரும்பியதும் இராணுவ அதிகாரிகள் கூட்
டம் போட்டு பேசினார்கள். செவ்விந்தியர்களின் கிராமத்
தை அழித்தது சரியா? தவறா என்று விவாதித்தார்கள்

படுகொலை
செய்யப்பட்டதில் இருந்து
தினமும் இரவில்
செவ்விந்தியர்களின் ஆவி
கொட்ட
மடிக்கின்றனவாம்.
ஆனால் நான்
பார்த்ததில்லை


நீங்கள் வேண்டுமானால்
இன்று இரவு இங்கே
தங்கியிருந்து பேய்களின்
நடமாரட்டத்தை
நோட்டமிடுங்களேன்!
நிச்சயமாக செய்கிறேன்!
என்னை இவ்வளவு தூரம்
காரில் அழைத்து
வந்ததற்கு மிக்க நன்றி!


பாலைவனம் முழுக்கவே பேய்களின் அட்டகாசம் இருக்கும். எதற்கும் எச்சரிக்கையாக இருங்கள்!
நல்லது! நான் பார்த்துக் கொள்ளுகிறேன்!


யார் இவர்? இந்த அத்துவானப் பகுதியில் அதுவும் தனியாக இருக்கிறாரே மிகவும் துணிச்சல் காரர்தான்!
தபால்காரர் மாயாவியை விட்டுவிட்டு புறப்பட்டார்.


120 ஆண்டுக்கு முன்பு தரைமட்டமாக்கப்பட்ட செவ்விந்தியர்களின் கிராமத்தை மாயாவி பார்த்தார்.
சே! எவ்வளவு இனிமையாக வாழ்ந்திருப்பார்கள்! இப்படி அநியாயமாக கிராமத்தையே அழித்துவிட்டார்களே?


மாயாவி கோட்டை மீது கூட அவ்வப்பொழுது பேய் நடமாட்டம் இருப்பதாக கேள்விப்பட்டேன்.
அவர் கோட்டையில் பேய் இருப்பதாக என்னைத்தான் சொல்கிறார்!

மாயாவி அந்தக் கோட்டையின் அடித்தளத்துக்கு வந்தார். அங்கே போடப்பட்டிருந்த ஒரு பெரிய பாறையை அகற்றினார்.
உள்ளே பாதை தெரிந்தது அதனுள்ளே கோட்டையின் மேலே செல்வதற்காக கம்பியில் இணைக்கப்பட்ட கூடையும், ஒரு உருளையும் இருந்தது. மாயாவி அதில் ஏறி உருளையை இழுக்க இழுக்க மேலே சென்றார்.
மாயாவி கோட்டையின் உச்சிக்கு வந்து சேர்ந்தார்.
டெவில்! நாம் இன்று இரவு இங்கே தங்கியிருந்து அந்தப் பேய்களின் நடமாட் டத்தை பார்ப்போமே?


இரவில் மாயாவியும் டெவிலும் அந்தக் கோட்டையிலேயே
தங்கினார்கள். மாயாவி நல்ல உறக்கத்தில் இருந்தபொழுது
திடீரென்று முரசுச் சத்தமும் மணிகளின் ஓசையும் கேட்டது.
KK


பாலைவனத்தில் வெள்ளை நிலா காய்ந்துகொண்டிருக்க
நிலவொளியில் செவ்விந்தியர்களின் ஆவிகள்
நடனமாடுவது போல மாயாவிக்கு தெரிந்தது.


மாயாவியின் உறக்கத்தில் செவ்விந்தியர்கள் கிராமத்தில் நடந்தவை அப்படியே தெரிந்தது.
டமால்
டமால்
இராணு வீரர்கள் பீரங்கியினால் செவ்விந்தியர்களின் கிராமத்தை தீக்கிரையாக்கியது கண் முன் தோன்றியது.

மாயாவி ஆழ்ந்த நித்திரையில் இருந்தாலும் அவர் கண் முன் நடந்தவை எல்லாம் கனவு போல விரிந்துகொண்டிருந்தது.
மாயாவி... மாயாவி... மாயாவி
திடீரென்று யாரோ மாயாவி மாயாவி என்று அழைப்பது போலிருந்தது.


பாலைவனத்திலிருக்கும் பேய்க் கோட்டை பகலில் அமைதியாக இருந்தாலும் இரவில் பேய்கள் கொட்டமடிக்கும் இடமாக திகழ்ந்தது.


அன்று இரவில் செவ்விந்தியர்களின் ஆவி மாயாவியை அழைத்தது.
மாயாவி...!
மாயாவி...!


மாயாவி குரல் கேட்டதும் உறக்கத்தில் இருந்து எழுந்து நிற்பது போல
வும், வானத்தில் இருந்து ஒரு மின்னல் கீற்று தோன்றி மாயாவியின் முன்
பளிச்சிடுவது போலவும் தெரிந்தது.
மாயாவி
மாயாவி...
மாயாவி...
?!

மின்னல் கீற்றில் இருந்து செவ்விந்தியர்களின் தலைவன் தோன்றினான்.
மாயாவியாரே! நான் மந்திரவாதி. எங்கள் கிராமத்தில் நடக்கும் திருவிழா வுக்கு நீங்கள் அவசியம் வர வேண்டும்!


கோட்டைக்கு கீழே இருந்தவர்களும் மாயாவியை
விழாவுக்கு அழைத்தார்கள்.
வாருங்கள் மாயாவி!
வாருங்கள் மாயாவி!

மாயாவியின் முன் தோன்றிய மந்திரவாதி புகையோடு
புகையாக நின்றுகொண்டிருந்தான்.
!

மாயாவிக்கு தோன்றிய கனவில் எல்லாம் தெளிவாக தெரிந்தது.
நான் மந்திரவாதி! செவ்விந்தியர்களின் தலைவன்!
கனவில் நடப்பது போல இருக்கிறதே!

மாயாவி! நாங்கள். நடத்தும் திருவிழாவில் நீங்கள் அவசியம் கலந்து கொள்ள வேண்டும்!
என்ன திருவிழா? நான் எப்படி வர்முடியும்?

மறுக்காதீர்கள் மாயாவி! உங்களை அழைத்துச் செல்ல கோடங்கா கூட தயாராக இருக்கிறது!
கோடங்காவா? என்ன சொல்கிறீர்கள்! அப்படியானால் என்ன?
கோடங்காவை அழைக்கிறேன்.
கோடங்கா வா?
கோடங்கா என்பது எங்களது தெய்வம்!
மந்திரவாதி வானத்தை பார்த்து கோடங்காவை அழைத்தான்.


உடனே வானில் இருந்து ஒரு இராட்சத ராஜாளி ஒன்று அவர்களை நோக்கிப் பறந்து வந்தது.
வா கோடங்கா!
!


மாயாவி ராஜாளியின் காலில் ஏறி நின்றுகொண்டார். உடனே அந்த ராஜாளிப் பறவை மாயாவியைத் தூக்கிக்கொண்டு பறந்தது.
கோடங்கா! அவரை நம் கிராமத்துக்கு அழைத்துப் போ!
என்ன கனவு இது! எல்லாமே விசித்திரமாக இருக்கிறதே!


மாயாவியின் கனவில் நம்பமுடியாக சில விசித்திரக் காட்சிகள் எல்லாம் தெரிந்தது.


ராஜாளிப் பறவை மாயாவியை தூக்கிக்கொண்டு செவ்விந்தியர்களின் கிராமத்துக்கு வந்தது. அங்கிருந்த செவ்விந்தியர்கள் மாயாவியை வரவேற்றார்கள்.
?!
மாயாவி வாழ்க!
மாயாவி வாழ்க!


இது என்னுடைய கோட்டை! படுகொலை செய்யப்பட்ட செவ்விந்தியர்கள் என்னை அவர்கள் கிராமத்திற்கு அழைத்து வந்திருக்கிறார்கள்! கனவில் இதெல்லாம் நடக்குமா?
மாயாவி நம்பிக்கையில்லாமல் இருந்தார்.


மாயாவியை விட்டுச் சென்றதும் செவ்விந்தியர்கள் ராஜாளிக்கு நன்றி சொன்னார்கள்.
கோடங்கி! மாயாவியை அழைத்து வந்தமைக்கு மிக்க நன்றி!
!

மாயாவியாரே! நாங்கள் படுகொலை செய்யப்படவில்லை! இராணுவத்தினரிடம் இருந்து நாங்கள் தப்பிவிட்டோம்!
தப்பிவிட்டீர்களா? நீங்கள் இறந்துவிட்டதாகத்தானே சரித்திரம் சொல்லுகிறது!
சரித்திரம் தவறாக எழுதப் பட்டுவிட்டது! நீங்கள்தான் கூட இருந்து எங்களை காப்பாற்றினீர்கள்! மறந்து விட்டீர்களா?
120 ஆண்டுக்கு முன்பு என்றால் என் முன்னோர்கள் இவர்களை காப்பாற்றி இருப்பார்களோ?


மாயாவியின் கனவில் எல்லாம் தெரிந்தது.
வெள்ளை நாய்கள் எங்களை அழிக்க முயன்றபோது நீங்கள்தான் காப்பாற்றினீர்கள்!
என் முன்னோரை பார்த்துவிட்டு இப்பொழுது நான்தான் காப்பாற்றினேன் என்று சொல்கிறார்கள்!

போனி இராணுவ வீரனை கொன்றதும் வெள்ளை நாய்கள் அவனை விரட்டி வந்தார்கள்!
அதிலிருந்துதான் உங்களுக்கும் வெள்ளையர்களுக்கும் பிரச்சினை ஆரம்பம்!


தலைவரே! வெள்ளை நாய் ஒருவன் என்னை தாக்க முயன்றான். நான் அவனை கொன்று விட்டேன்!
ஆமாம்! அதை நானும் பார்த்தேன்!
அது நடந்தபொழுது மாயாவியும் உடன் இருந்தார்.
நாங்கள் உன்னை காப்பாற்றுகிறோம். பயப்படாதே!

இராணுவ வீரர்களிடம் பேசுவதற்காக செவ்விந்தியர் தலைவன் சென்றபொழுது மாயாவியும் உடன் சென்றார்.
போனி எங்கள் ஆளை கொன்றுவிட்டான்! அதனால் அவனை எங்களிடம் ஒப்படை யுங்கள்!
முடியாது! அவனை உங்களிடம் ஒப்படைக்க முடியாது!
!

உடனே இராணுவ வீரர்கள் திரும்பி விட்டார்கள்.
ஆனால் அவர்கள் படை பலத்துடனும் பீரங்கிகளுடனும் நிச்சயம் திரும்பி வருவார்கள்!
போனியை வெள்ளையர்களிடம் ஒப்படைத்தால் இவனை தூக்கில் போட்டுவிடுவார்கள்.
மாயாவியாரே! நீங்கள்தான் எப்படியாவது எங்களை அவர்களிடம் இருந்து காப்பாற்ற வேண்டும்!
என்னால் என்ன செய்ய முடியும்?
என் முன்னோர் இவர்களுக்கு எப்படி உதவியிருப்பார்கள்?


அப்போது செவ்விந்தியன் ஒருவன் குதிரையில் விரைந்து வந்தான்.
வெள்ளை நாய்கள் பீரங்கிகளுடன் நம் கிராமத்தை நோக்கி வருகி றார்கள்!
தலைவரே! நான் அவர்களிடம் சரண் அடைந்து விடுகிறேன்!
இல்லை போனி! உன்னை எப்படியும் கொன்றுவிடுவார்கள்!

தலைவரே! என் ஒருவனை காப்பாற்ற நினைத்து நம் அனைவரையும் இழக்க வேண்டுமா?
ஆமாம்! அவர்கள் பீரங்கிகளின் முன் அம்பு தவிடுபொடியாகிவிடும்!
?
மாயாவி நடப்பதை கவனித்துக்கொண்டிருந்தார்.


சென்ற நூற்றாண்டில் நடந்த
நிகழ்ச்சிகள் மாயாவியின்
கனவில் தோன்றியது.
என் முன்னோர் இவர்களை வெள்ளையர்களிடம் இருந்து எப்படி காப்பாற்றியிருப்பார்!
மாயாவியாரே! வெள்ளையர்களின் படைகள் வந்து கொண்டிருக்கின்றன! நீங்கள்தான் எங்களை காப்பாற்ற வேண்டும்!


உடனே மாயாவிக்கு அவர்களின் முன்னோரின் அசிரிரி கேட்டது.
இவர்களை எல்லாம் அருகில் இருக்கும் கோட்டைக்குள் பதுங்கியிருக்கச் சொல்...!
?!

என் முன்னோர் எனக்கு கட்டளை பிறப்பித்துவிட்டார்!
இதுவும் நல்ல யோசனைதான். இப்பொழுதே என் மக்களை தயார் படுத்துகிறேன்!


உடனே செவ்விந்தியர்கள் கூட்டம் கூட்டமாக கிராமத்தைவிட்டு வெளியேறினார்கள்.
விரைவாக செல்லுங்கள்! இராணுவ வீரர்கள் உங்களைத் தொடர்ந்து வந்துவிடப் போகிறார்கள்!
அவர்கள் நிச்சயம் பின்தொடர்ந்து வரமாட்டார்கள்!


கிராமம் காலியாகிக் கொண்டிருந்தது. அதற்குள் மந்திரவாதி பானையை அடுப்பில் ஏற்றி ஏதேதோ மந்திரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தான்.
ஓம்.. ரீம்...! ஓம்... ரீம்..!
அவர் என்ன செய்கிறாா ?
மந்திரசக்தியை பயன்படுத்தி ஏதோ மந்திர வித்தை செயயப் போகிறார்!


ஓம் ! ரீம்..! ஓம்.. ! ரீம்..!
இவர் ஒருவரே இராணுவ வீராகளை எதிாக்கப் போகிறாரா?
மந்திரத்தால் அவர்களை எதிர்க்க முடியுமா?


மாயாவி அதற்குள் கிராமத்து மக்களை கோட்டைக்குள் அழைத்து வந்தார்.
விரைவாக வாருங்கள்! வீராகள் அருகில் வந்து விட்டாாகள்!


கிராம மக்களை கோட்டைக்குள் பத்திரப்படுத்திவிட்டு மாயாவி திரும்பவும் கிராமததுக்குள் வந்து மந்திரவாதியின் நடவடிக்கைகளை உன்னிப்பாக கவனிததுக் கொண்டிருநதார்
ஓம்... ரீம்..
இவருடைய மநதிரசக்தியால் இராணுவ வீராகளை எதிாகக முடியுமா


மந்திரவாதியான கிராமத்துத் தலைவன் மந்திரததை பயன்படுத்தி இராட்சத ராஜாளி கோடங்காவை வரவழைத்தான்.
கோடங்கா! தெய்வமே நீதான் எங்கள் கிராமத்து மக்களை இராணுவ வீரர்களிடம் இருந்து காப்பாற்ற வேண்டும்!
!
மாயாவி மறைந்திருந்து பார்த்தார்.


கோடங்கி மந்திரவாதியின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு தன் உடம்பில் இருந்து சில இறகுகளை உதிாததது


கோடங்கியின் இறகுகள் தரையில் விழுந்ததும் ஒவ்வொரு இறகுக ளில் இருந்தும் ஒரு செவ்விந்தியாகள் தோன்றினார்கள். அவர்கள் ஆயுதங்கள் வைத்து இருந்தார்கள்.

அதே நேரம் இராணுவ வீரர்கள் கிராமத்தை நோக்கி சென்று கொண்டிருந்தார்கள். இங்கே செவ்விந்திய வீரர்கள் தயாராக இருந்தாகள்
வீரர்களே தாக்குதலுக்கு தயாராக இருங்கள் !
?!
அதற்குள் ஒரு படையையே உருவாக்கிவிட் டார்களே?

கோட்டைக்குள் செவ்விந்தியர்கள் தன் மனைவி குழந்தைகளுடன் சோகத்தில் மூழ்கியிருந்தார்கள்.

இராணுவ வீரர்கள் கிராமத்தை முற்றுகையிட்டதும், தலைவரை சந்தித்தார்கள்.
ஏய்...! மரியாதையாக போனியை ஒப்படை! இல்லை தாக்குதல் நடத்தவேண்டியதுவரும்!
இது அராஜகம்! உங்களால் அவனை கைது செய்ய முடியாது!


பேச்சு பயனற்றுப் போய் முடிவில் போர் ஆரம்பமானது. இருவரும் தாக்குதல் நடத்தினார்கள். குண்டுகள் வெடித்தன. அம்புகள் பறந்தன.
டுமீல்...!
ஆ...! அம்மா...!
உண்மையான வீரர்களைப் போல போரிடுகிறார்களே!

பீரங்கிகள் முழங்கின கிராமமே தீப்பிடிதது எரிந்தது.
மந்திரசக்தியால் உருவாக்கப்பட்ட மனிதர்கள் செதது மடிந்தார்கள்


சிறிது நேரத்தில் செவ்விந்தியர்கள் அனைவரும் மடிந்து போனார்கள்
அனைவரும் செத்துவிட் டார்கள்!
கிராமத்தைக்கூட தரைமட்டமாக்கி விட்டோம்!

போர் முடிந்ததும் இராணுவ வீரர்கள் திரும்பிச் சென்றுவிட்டனா தலைவனாக இருந்த மந்திரவாதிகூட செத்துக்கிடந்தான் மாயாவி மந்திரவாதி அருகில் வந்தார்.
தலைவனும் செத்துவிட்டானே!


கிராமம் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது. படைவீரர்கள் திரும்பினார்கள்.
சே! ஒருவர்கூட உயிரோடு இல்லையே?


இறகில் இருந்து தோன்றிய மனிதர்கள் மறுபடியும் கொஞ்சம் கொஞ்சமாக இறகுகளாக மாறினார்கள்.
?!
என்ன ஆச்சரியம். அட! திரும்பவும் இறகுகளாக மாறி விட்டார்களே!


மாயாவி மந்திரவாதியின் உடலைத் தூக்கிக்கொண்டு நடந்தார்.
இறகு மனிதர்கள் மாயமாகிவிட்டார்கள்! ஆனால், தலைவன் உண்மையில் இறந்துவிட்டார்! மக்களைக் காக்க தன் உயிரை நீத்திருக்கிறார்! இவர்தான் உண்மையான தலைவர்!


கோட்டைக்குள் இருந்த கிராம மக்கள் வெளியே வந்தார்கள்.
தலைவர் இறந்துவிட்டார்! அவர் உடலை நான் புதைத்துவிட்டேன்!
அப்படியா? எங்கள் உயிரை காப்பாற்றியதற்கு நன்றி!
மாயாவி! இனி நாங்கள் இங்கு வாழ முடியாது. எனவே மேற்குப் பக்கமாக போகிறோம்!


மாயாவியின் உறக்கத்தில் எல்லாமே தெளிவாக தெரிந்தது. தபால்காரர் சொன்ன கதைக்கும் இதற்கும் மாறுதல் இருந்தது.
மந்திரவாதியான தலைவன் மந்திரத்தைப் பயன்படுத்தி ராஜாளியின் இறகுகளைக் கொண்டு மனிதர்களை உருவாக்குகிறானே?


மறுநாள் காலை மாயாவி உறக்கத்தில் இருந்து எழுந்தார்.
என்ன வேடிக்கையான கனவு கண்டிருக்கிறேன்! ராஜாளி உதிர்த்த இற்குகளில் இருந்து மனிதர்கள உருவாகிறார்கள்!


அங்கே ராஜாளியின் ஒரு இறகு கிடந்தது.
கனவில் ஒரு ராஜாளி என்னை கிராமத்துக்கு தூக்கிச் சென்றது விசித்திரமான கனவுதான்!
என்ன இது?

மாயாவி அந்த இறகை கையில் எடுத்துப் பார்த்தார்.
இராட்சத ராஜாளியின் இறகு! இங்கு எப்படி வந்தது?


மாயாவி கோட்டையில் இருந்து இறங்கி நடந்து வந்தார்.
அப்பொழுது அந்த தபால்கார பெரியவர்
மாயாவியைப் பார்த்தார்.
என்ன மிஸ்டர்! திரும்பவும் வந்துவிட்டீர்கள்! காரில் ஏறுகிறீர்களா?
நான் நேற்று இரவு இந்தக் கோட்டையில் தங்கினேன் சுவாரஸ்யமா ஒரு கனவு கண்டேன!

மாயாவி மண்டைஓட்டுக் குகைக்கு வந்து, நூலகத்தில் உள்ள நூற்
களை எடுதது தான் பார்த்த கனவு பற்றிய குறிப்புகளைதேடினார்.
நான் போனியையும், கிராமத்து மக்களையும் காப்பாற்றினேன். தலை வன் மந்திரசக்தியை பயன்படுத்தி வீராகளை உருவாக்கி கடைசியில் மடிந்தும் போனான.
150 ஆண்டுக்கு முன்பு நடந்ததை என் முன்னோர் எழுதி யிருக்கிறார்!
KK


இராஜாளி கோடாங்கி
இறகுகளை உதிர்த்து
100 க்கு மேற்பட்ட வீரர்
களை உருவாக்கியது.
அந்த வீரர்கள் வெள்
ளைக்கார வீரர்களிடம்
போரிட்டு மாண்டார்கள்
முடிவில் தலைவனும்
மக்களுக்காக உயிரை
விட்டுவிட்டான்.
உண்மையிலேயே
தலைவனின் சக்தி
அபாரமானதுதான்!


150 ஆண்டுக்கு முன்னால்
நடந்த நிகழ்ச்சிதான் எனக்கு
கனவில் வந்திருக்கிறது. என் முன்னோர்
மிகவும் சாதுர்யமாகத்தான் செயலில்
இறங்கியிருக்கிறார்
KK
முடிந்தது



தங்க
வேட்டை
தங்கத்தை தேடிச் செல்லும் கோஷ்டிகள்
ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்கின்றன!
விறுவிறுப்பான
மர்மப் படக்கதை
படிக்கத் தவறாதீர்கள்!
டிசம்பர் 1-ந் தேதி வெளிவருகிறது!